Dhinathdhalam@gmail.com

www.dhinathdhalam.com

விளம்பரதாரர்கள் தேவை

தமிழகம் முழுவதும் 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் செய்தி – விளம்பரம் சேகரிக்க முழு நேர - பகுதி நேர பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.

☎ 9 111 222 654

தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556 நடுநிலை நாளிதழ் ISO : 9001:2015; QT-57977/1125

DHINATH DHALAM Tamil & English daily Paper

செய்தியாளர்கள் தேவை



தமிழகம் முழுவதும் மாவட்டம் & தாலுகா வாரியாக சந்தாதாரர் அடிப்படையில் ஆண்/பெண் நிருபர்கள் தேவை

☎ 94440 82959

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 · இதழ் Issue : 80 · புதன்கிழமை Wednesday · 21.01.2026 · பக்கங்கள் Pages:4 · ₹ 6 · ஈரோடு Erode

# சட்டபேரவையில் ஆளுநர் உரை என்ற நடைமுறையை நீக்க நடவடிக்கை எடுக்கப்படும்

## முதலமைச்சர் ஸ்டாலின் பேச்சு



சென்னை:

"ஆண்டின் தொடக்கத்தில் ஆளுநர் உரை என்ற நடைமுறையை விலக்கிடும் வகையில் அரசமைப்புச் சட்டத்தைத் திருத்துவதற்கான முயற்சிகளை இந்தியா முழுவதும் இருக்கும் ஒத்த கருத்துகளைக் கொண்ட அரசியல் கட்சிகள் துணையோடு நாடாளுமன்றத்தில் திமுக முன்னெடுக்கும்" என தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.

தமிழக சட்டப்பேரவையில் ஆளுநர் ஆர். என்.ரவி உரையை வாசிக்காமல் அவையிலிருந்து வெளியேறிய நிலையில், தமிழக முதல்வர்மு.க.ஸ்டாலின் தீர்மானத்தைக்கொண்டு வந்து ஆற்றிய உரையில், "தமிழக சட்டப்பேரவையில் மீண்டும் ஒரு முறை ஆளுநர் சட்ட விதிகளையும், மரபுகளையும் மீறி செயல்பட்டு அவையிலிருந்து வெளியே சென்றுள்ளார்; வெளியே என்று சொல்வதைவிட, வெளியேறிச் சென்றிருக்கிறார்.

ஆளுநரின் செயல் அவர் வகிக்கக்கூடிய பதவிக்கு அழகல்ல. இந்திய அரசமைப்புச் சட்டம் article 176-ன்படி, ஆளுநர் உரை என்பது மாநில அரசால் தயாரிக்கப்பட்டு ஆளுநரால் முழுமையாகப் படிக்கப்படவேண்டிய ஒன்றாகும். இதில் ஆளுநர் தனது சொந்தக் கருத்துக்களைத் தெரிவிப்பதற்கோ, மாநில அரசால் தயாரித்து வழங்கப்பட்ட உரையில் நீக்கம் செய்வதற்கோ அரசமைப்புச் சட்டத்தில் இடமில்லை.

அரசமைப்புச் சட்டத்தில் ஆளுநரின் உரை குறித்து தெரிவிக்கும் Article 176-ல்,தெளிவுரைகளைக் கேட்பதற்கு வழிவகை செய்யப்படவில்லை. இருப்பினும் நாம் அவர் அவ்வாறு சில விளக்கங்களைக் குறிப்பிட்டு அரசுக்கு நேற்று கடிதம் எழுதியதைத் தொடர்ந்து அவருக்கு அதற்கான பதிலும் அளிக்கப்பட்டது. இந்த நிலையில் ஆளுநர் வேண்டுமென்றே அரசமைப்புச் சட்டத்தை மீறிய ஒரு செயலை செய்துள்ளார். ஆளுநரின் செயல் என்பது நூற்றாண்டு கால மரபையும், நீண்ட பாரம்பரியத்தையும் கொண்ட இந்த மக்கள் சபையை, அதன் மாட்சிமையை அவமதிக்கும் செயலாகும் என்றே நான் கருதுகிறேன்.

10-4-2023 அன்று இதே பேரவையில் நான் ஆற்றிய உரையின் ஒரு பகுதியை இங்கே நான் நினைவுகூர விரும்புகிறேன்.

"ஆட்டுக்குத் தாடியும், நாட்டுக்கு ஆளுநர் பதவியும் தேவையில்லை" என்று அண்ணா கூறியபோதிலும், அதை கருணாநிதி வழிமொழிந்தபோதிலும், அந்தப் பதவி இருக்கும்வரை அதற்குரிய மரியாதையைக் கொடுக்க அவர்கள் முதலமைச்ச ர்களாக இருந்த நேரத்தில் தவறியதில்லை. அவர்களது வழியைப் பின்பற்றி நானும் அதிலிருந்து இம்மியளவும் விலகியதில்லை; இந்த அரசும் தவறியதில்லை." என்று அன்றைக்கு நான் எடுத்துரைத்தேன்.

அந்தக்கொள்கையையொட்டியே நான் ஆளுநர்உரைநிகழ்த்தவேண்டும் என்று நடவடிக்கை எடுக்க ஆணையிட்டேன்.

எனினும், ஆளுநர் ஏற்கெனவே நடந்துகொண்டது போலவே மீண்டும் இன்று செயல்பட்டிருப்பது மிகவும் வருத்தத்திற்குரியது. தமிழ்நாடு சட்டமன்றம், எட்டரைக் கோடி தமிழ் மக்களுடைய உணர்வுகளைப் பிரதிபலிக்கின்ற மாமன்றம். ஆளுநர் என்பவர் மாநில நலனில் அக்கறை கொண்டவராக, மக்கள் மேம்பாட்டில் ஆர்வம் கொண்டவராக, உண்மையைப் பேசுபவராக இருக்க வேண்டும். மக்களுடைய பேராதரவோடு, பெரும்பான்மையோடு வெற்றி பெற்று ஆட்சி அமைத்துள்ள அரசு எடுக்கின்ற முடிவுகளுக்கு ஒத்துழைப்பவராக இருக்க வேண்டும்.

அதைத்தான் அரசமைப்புச்சட்டமும் அந்தப் பதவி வகிப்பவரிடம் இருந்து எதிர்பார்க்கிறது. ஆனால் நம்முடைய ஆளுநர் அவர்கள் அதற்குமாறாகச் செயல்படுகிறார். மாநில நிர்வாகத்தை முடக்கவும், பொதுமேடைகளில் அரசியல் பேசியும் அவதூறு பரப்பிவருகிறார். அது அவரது சொந்த விருப்பம் என்று கருதலாம்.

எனினும், அத்தகைய ஒரு முயற்சியை இங்கும் செய்ய அவர் முனைவது ஏற்புடையதல்ல. நூற்றாண்டு விழா கொண்டாடி, சீரோடும், சிறப்போடும் இயங்குகின்ற இப்பேரவையின் புகழ் மங்கிடாத வகையில் பாதுகாத்து வந்த சான்றோர்களின் வழித்தடத்தினைப்பின்பற்றவேண்டிய கடமை நமக்கு உள்ளது. வரலாற்றுப் பெருமை கொண்ட இப்பேரவையின் மாண்பினைப்பாதுகாக்கவேண்டிய முதல் பொறுப்பு எனக்கு உள்ள காரணத்தால், கீழ்க்காணும் தீர்மானத்தை பேரவைத் தலைவரின் இசைவோடு, சட்டமன்றப் பேரவை விதி 17-ஐத் தளர்த்தி, முன்மொழிந்திட அனுமதிகோருகிறேன்" என்று கூறினார். இதனை தொடர்ந்து சபாநாயகர் அந்த தீர்மானத்துக்கு அனுமதி வழங்கினார்.

இதனை தொடர்ந்து முதல்வர் முன்மொழிந்த தீர்மானத்தில், "ஏற்கெனவே உள்ள நடைமுறைகளைப் பின்பற்றி, தமிழ்நாடு அரசால் தயாரித்து அனுப்பி வைக்கப்பட்ட ஆளுநர் உரையைப் பேரவையில் படிக்காமல் ஆளுநர் சென்றுள்ளதை இப்பேரவை ஏற்கவில்லை. ஆளுநருக்கு அனுப்பி வைக்கப்பட்ட, சட்டமன்ற உறுப்பினர்களின் மேசையில் உள்ள கணினியில் பதிவேற்றம் செய்யப்பட்ட ஆளுநர் உரையின் ஆங்கில மொழியாக்கம் இங்கே ஆளுநரால் படிக்கப்பட்டதாக இப்பேரவைக் கருதுகிறது. அவ்வாறே அவைக் குறிப்பில் நடவடிக்கைக் குறிப்புகள் இடம் பெறலாம்.

மேலும், மரபுவழி நிகழ்வுகள், பேரவைத் தலைவரால் படிக்கப்பெறவுள்ள ஆளுநர் உரையின் தமிழாக்கம் மற்றும் நான் முன்மொழிகின்ற தீர்மானம், அதன் முடிவு ஆகியவை மட்டும் பேரவை நடவடிக்கைக் குறிப்பில் இடம் பெறலாம் என்னும் தீர்மானத்தை மொழிகிறேன். இந்தத் தீர்மானத்தை அனைத்து உறுப்பினர்களும் ஒருமனதாக நிறைவேற்றித் தர வேண்டுகிறேன்" என்றார். இதனை தொடர்ந்து அத்தீர்மானம் நிறைவேற்ற ப்பட்டது.

இதன் பின்னர், தீர்மானத்தை ஒருமனதாக நிறைவேற்றித் தந்த உறுப்பினர்களுக்கு நன்றி தெரிவித்து ஆற்றிய உரையில், "ஆண்டுதோறும் அரசின் சார்பில் உரை தயாரித்து அனுப்புவதும், அதனை முறையாகவாசிக்காமல் ஆளுநர் முரண்டு பிடிப்பதும் தொடர்ந்து வருவது நல்லதல்ல.

ஆளுநர்கள் மாநில அரசுகளுக்கு இடைஞ்சலாக இருந்து இப்படி செயல்படுவது இங்கு மட்டுமல்ல, பல்வேறு மாநிலங்களிலும் நடந்து வருகிறது. ஒரு நாள் செய்தியாக இதனை கடந்துவிட முடியாது.

ஆண்டின் தொடக்கத்தில் அரசின் கொள்கை அறிக்கையை ஆளுநர் முறையாக வாசிப்பது நடைமுறை. அந்த நடைமுறையை ஒருவர் தொடர்ந்து மீறும்போது அதுபோன்ற விதிகளை எதற்காக வைத்திருக்க வேண்டுமென்ற கேள்வி சாதாரணமாகவே அனைவரின் மனதிலும் எழும். அரசு தயாரித்தளித்த அறிக்கையை ஆளுநர் படிக்காமல் வெளியேறுவதால், திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனைகளைப் பயன்பெறும் மக்களிடம் மறைத்துவிட முடியாது.

அரசியலமைப்புக்கும், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்கும், மக்கள் பிரதிநிதிகள் அடங்கிய சட்டப்பேரவைக்கும் மதிப்பளிக்காமல் மக்கள்நல நடவடிக்கைகளை முடக்கி வைத்து முரண்டு பிடிக்கும் தமிழ்நாடு ஆளுநரை 'Recalcitrant Governor' என "The Hindu" தலையங்கத்தில் நேற்று குறிப்பிட்டிருந்தார்கள். அவரது இன்றைய செயல்பாடும் அதனை மெய்ப்பித்துள்ளது." என்று தெரிவித்துள்ளார்.

# "ஆளுநர் மீது தவறான எண்ணத்தை உருவாக்க ஸ்டாலின் முயற்சி"

## அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி குற்றச்சாட்டு



சென்னை: "ஆளுநர் மீது ஒரு தவறான எண்ணத்தை உருவாக்க வேண்டும் என்ற அடிப்படையில்தான் திட்டமிட்டு முதல்வர் ஓர் அறிக்கையை தயார் செய்து சட்டப்பேரவையில் தீர்மானமாக வாசித்துள்ளார்" என சட்டப்பேரவை எதிர்க்கட்சித்தலைவர்,அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்தார்.

தமிழக சட்டப்பேரவை கூட்டத்தொடர் இன்று தொடங்கியது. இக்கூட்டத்தொடர் தொடங்கிய சில நிமிடங்களிலேயே தமிழக அரசு தயாரித்த உரையை வாசிக்காமல் ஆளுநர் ஆர்.என்.ரவி அவையிலிருந்து வெளிநடப்பு செய்தார். இதனைத் தொடர்ந்து ஆளுநரின் உரையை சட்டப்பேரவை சபாநாயகர் அப்பாவு வாசித்தார்.

இந்தச் சூழலில், அதிமுக சட்டப்பேரவை உறுப்பினர்களும் அவையிலிருந்து வெளிநடப்பு செய்தனர். சட்டப்பேரவை வளாகத்தில் செய்தியாளர்களை சந்தித்த எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி, "சட்டப்பேரவையிலிருந்து தமிழக அரசின் உரையை வாசிக்காமல் வெளிநடப்பு செய்ததற்கான காரணங்களை ஆளுநர் மாளிகை வெளியிட்டுள்ளது. அதிமுக ஆட்சியில் சட்டம் ஒழுங்கு பேணிக் காக்கப்பட்டது. சட்டத்தின் ஆட்சி நடைபெற்றது. கடந்த நான்கரை ஆண்டு கால திமுக ஆட்சியில் சட்டம் ஒழுங்கு அடியோடு சீர்கெட்டுவிட்டது. எங்கு பார்த்தாலும் கொலை, கொள்ளை, பாலியல் வன்கொடுமைகள் நடக்காத நாளே இல்லை.

தமிழ்கம் போதைப்பொருள் நிறைந்த மாநிலமாக மாறிவிட்டது. நாங்கள் பலமுறை போதைப்பொருள்களை ஒழிக்க வேண்டும் என வலியுறுத்தியும் இந்த அரசு செவிசாய்க்கவில்லை. இதனால் இன்று இளைஞர்கள்,மாணவர்கள் போதைக்கு அடிமையாகி கடும் குற்றச்செயல்களில் ஈடுபடுகின்றனர். இப்படிப்பட்ட மோசமான திமுக ஆட்சி அகற்றப்பட வேண்டும், முதல்வர் ஸ்டாலின் ராஜினமா செய்ய வேண்டும் என வலியுறுத்தி நாங்கள் வெளிநடப்பு செய்துள்ளோம்.

இந்தியாவிலேயே சூப்பர் முதல்வர் என்று ஸ்டாலின் தன்னைத்தானே சொல்லிக்கொள்கிறார். இன்று தமிழகத்தின் நிலையை ஆளுநர் தனது அறிக்கையில் கூறியுள்ளார். அமைச்சரவை தயாரித்த உரையை ஆளுநர் வாசிக்க வேண்டுமென சபாநாயகர் சொல்கிறார். ஆனால், உரையில் உள்ள தவறுகளை ஆளுநர் சுட்டிக்காட்டுகிறார். தவறான செய்தியை வாசிக்கமாட்டேன் என ஆளுநர் சொல்கிறார், அவருடைய நியாயம் அதுதான். உரையில் உண்மைத்தன்மை இருந்தால்தான் வாசிக்க முடியும். தவறு இருப்பதால்சுட்டிக்காட்டுகிறார். இதனை இந்த அரசு ஏற்றுக்கொள்ள மறுக்கிறது.

ஆளுநர் பற்றி என்ன செய்தி சொல்லவேண்டுமோ, அதனை முன்கூட்டியே தயாரித்து வந்து, சட்டப்பேரவையில் தீர்மானமாக கொண்டு வருகிறார் முதல்வர்.

ஆளுநர் இப்படி நடந்துகொள்வார் என்பது முதல்வருக்கு எப்படி முன்கூட்டியே தெரியும். ஆக திட்டமிட்டு இந்த அரசாங்கம் ஆளுநர் மீது ஒரு தவறான எண்ணத்தை உருவாக்க வேண்டும் என்ற அடிப்படையில்தான் முதல்வர் ஓர் அறிக்கையை தயார் செய்து சட்டப்பேரவையில் தீர்மானமாக கொண்டு வந்துள்ளார்.

ஆளுநர் உரையில் வேறு யாரும் கருத்து சொல்ல முடியாது. மரபுப்படி ஆளுநர் உரையில், ஆளுநர் உரை மட்டுமே இடம்பெற வேண்டும். ஆனால், முதல்வர் தனது கருத்துக்களை இதில் பதிவு செய்கிறார். இது எந்த வகையில் நியாயம். தேசிய கீதம் பாடப்படவில்லை என்ற ஆளுநரின் குற்றச்சாட்டு குறித்து நான் கருத்து தெரிவிக்க விரும்பவில்லை. மக்களின் பிரச்சினைகளை மட்டுமே இங்கு பேச வந்துள்ளோம்" என்றார்

செய்திகள் உடனுக்குடன் படிக்க

தினத்தளம்


DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்

Join my WhatsApp group.

https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

# மீண்டும் வரலாறு காணாத உச்சத்தில் தங்கம், வெள்ளி விலை



சென்னை

தங்கம் விலை கடந்த மாதம் (டிசம்பர்) 15-ந்தேதி ஒரு சவரன் ரூ.1 லட்சத்தை தாண்டியது. அதன் பின்னர் விலை குறைந்த நிலையில், அதே மாதம் 22-ந்தேதியில் இருந்து மீண்டும் ஏறுமுகத்தில் பயணித்தது. கடந்த மாதம் 28-ந்தேதி புதிய உச்சத்தை தொட்டு, பிறகு விறுவிறுவென இறங்கியது. அப்படியாக விலை குறைந்து வந்து, கடந்த ஒரு வாரமாக மீண்டும் ஏற்றத்திலேயே தங்கம் விலை இருந்து வருகிறது.

நேற்று தங்கம் விலை அதிகரித்தது. அதன்படி சென்னையில் ஆபரணத்தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.1,360 அதிகரித்து, ஒரு சவரன் ரூ.1,07,600-க்கு விற்பனை செய்யப்பட்டது. கிராமுக்கு ரூ.170 அதிகரித்து, ஒரு கிராம் ரூ.13,450-க்கு விற்பனை செய்யப்பட்டது.தங்கத்தை போலவே வெள்ளி விலையும் சற்று உயர்ந்தது. வெள்ளி விலையை பொறுத்தவரையில், ஒரு கிலோ வெள்ளி ரூ.8,000 அதிகரித்து, ரூ.3,18,000-க்கும், கிராமுக்கு ரூ.8 அதிகரித்து. ஒரு கிராம் ரூ.318-க்கும் விற்பனை செய்யப்பட்டது.

தங்கம் விலை

இந்நிலையில் தங்கம் விலை மீண்டும் வரலாறு காணாத புதிய உச்சத்தை தொட்டுள்ளது. அதன்படி சென்னையில் ஆபரணத்தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.1,280அதிகரித்து, ஒரு சவரன் ரூ.1,08,880-க்கு விற்பனைசெய்யப்படுகிறது. கிராமுக்கு ரூ.160 அதிகரித்து, ஒரு கிராம் ரூ.13,610-க்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

வெள்ளி விலை

தங்கத்தை போலவே வெள்ளி விலையும் உயர்ந்துள்ளது.வெள்ளி விலையை பொறுத்தவரையில், ஒரு கிலோ வெள்ளி இன்று ரூ.12,000 அதிகரித்து, ரூ.3,30,000-க்கும், கிராமுக்கு ரூ.12அதிகரித்து. ஒரு கிராம் ரூ.330-க்கும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

கடந்த 5 நாட்களில்தங்கம் விலை நிலவரம்:-

17.01.2026 ஒரு சவரன் ரூ.1,08,880

17.01.2026 ஒரு சவரன் ரூ.1,06,240

16.01.2026 ஒரு சவரன் ரூ.1,05,840

15.01.2026 ஒரு சவரன் ரூ.1,06,320

14.01.2026 ஒரு சவரன் ரூ.1,06,240

13.01.2026 ஒரு சவரன் ரூ.1,05,360



கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை அருகே உள்ள களமருதூரில் கடந்த மாதம் புதியதாக காவல் நிலையம் திறக்கப்பட்டது இந்த காவல் நிலையத்தில் முதல் முறையாக சமத்துவ பொங்கல் விழா வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டது இதில் கலந்துகொண்ட காவலர்கள் தமிழர்களின் பாரம்பரிய ஆடைகளான வேட்டி சட்டை மற்றும் சேலை அணிந்து ஆண் காவலர்களும் பெண் காவலர்களும் திரளாக கலந்து கொண்டனர் கண்காணிப்பாளர் அசோகன் முன்னிலையில் நடைபெற்ற இந்த விழாவில் காவல் நிலைய முன்பாக பொங்கல் வைத்து படையலிடப்பட்டது இதில் உதவி ஆய்வாளர்கள் அலெக்ஸ், அழகுசெந்தில் மற்றும் ஆண்,. பெண் காவலர்கள் கலந்து கொண்டு பொங்கலோ பொங்கல் என்று உற்சாகமாக முழக்கமிட்டனர்...



தேனி மாவட்டம் பெரியகுளம் தென்கரை டி.கள்ளிப்பட்டியில் +2வில் அதிக மதிப்பெண் பெற்ற மோகனப்பிரியாவுக்கு ஹானஸ்ட்.கல்வி.அறக்கட்டளை மூலம் பாராட்டி பத்தாயிரம் ரூபாய் நிர்வாகிகளால் வழங்கப்பட்டது.

# தூத்துக்குடி தலித் இளைஞர் படுகொலையை கண்டித்து பெரியகுளத்தில் வி. சி.க.வினர் கண்டன ஆர்ப்பாட்டம்



தேனி மாவட்டம் பெரியகுளம் வட கரை பழைய பேருந்து நிலைய வளாகப்பகுதியில் உள்ள அம்பேத்கர் சிலை அருகே தேனி மாவட்ட விடுதலைச்சிறுத்தைகள் கட்சிசார்பில்தூத்துக்குடி மாவட்டம்திருச்செந்தூர் தாலுகா

பெஞ்சமின் நகர் பகுதியைச் சார்ந்த தலித் இளைஞர் எழுமலையை

வீடு புகுந்து வெட்டி படுகொலை செய்ததை கண்டித்தும்,

சாதி வெறிபிடித்த கயவர்களை

குண்டர் தடுப்புச் சட்டத்தில் கைது செய்ய வலியுறுத்தியும்

மாபெரும் கண்டன கோஷங்களை எழுப்பி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. பெரியகுளம் தொகுதி மாவட்ட செயலாளர்

வழக்கறிஞர் சுசி.தமிழ் பாண்டியன் தலைமையில் நடைபெற்ற இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் தேனி மண்டல செயலாளர் ஜெ.ரபீக், ஆண்டிபட்டி - பெரியகுளம் தொகுதி மண்டல துணைச் செயலாளர்

ப.நாகரத்தினம் ஆகியோர் முன்னிலைவகித்தனர். பெரியகுளம் நகரச் செயலாளர் ஜோதி முருகன் வரவேற்புரையாற்றினார். வி.சி.க முதன்மை செயலாளர்

ஏ.சி.பாவரசு,தலைமை செய்தி தொடர்பாளர் கார்வேந்தன், முன்னாள் மண்டல செயலாளர் இரா. தமிழ்வாணன் ஆகியோர் கண்டன உரையாற்றினர்.

கண்டன ஆர்ப்பாட்ட ஒருங்கிணைப்பாளர்கள் மாநில மண்டல,மாவட்ட தொகுதி, ஒன்றிய, நகர, பேரூர், ஊராட்சி மற்றும் முகாம் பொறுப்பாளர்கள் கண்டன ஆர்ப்பாட்ட ஒருங்கிணைப்பு செய்திருந்தனர இளஞ்சிறுத்தை எழுச்சிப் பாசறை மாவட்ட அமைப்பாளர் அ.மது நன்றியுரை யாற்றினார்.

# அரசு புறம்போக்கு நிலத்தை தனிநபர்கள் ஆக்கிரமிப்பை தடுக்க கோரிக்கை மனு



விருத்தாசலம் அருகே உள்ள புதுக்கூரைப் பேட்டை ஊராட்சியில் சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் வசித்து வருகின்றனர். இப்பகுதியில் பொதுமக்கள் மற்றும் இளைஞர்கள் விளையாட்டு மற்றும் பல்வேறு தேவைக்காக பயன்படுத்துவதற்கு அரசுக்கு சொந்தமான 20 சென்ட் இடம் இருந்து வந்தது. இந்த இடத்தில் பொங்கல் தினத்தில் வருடந்தோறும் இளைஞர்கள் விளையாட்டு நிகழ்ச்சிகள் நடத்தி வந்தனர்.

அதுபோல் இந்த வருடத்திற்கான பொங்கல் தினத்தில் விளையாடுவதற்காக இடத்தை இளைஞர்கள் சுத்தம் செய்துள்ளனர். அப்போது அங்கு வந்த ஒரு சில தனிநபர்கள், இந்த இடத்தை தங்கள் பெயரில் பட்டா வாங்கி உள் ளோம். இது எங்களுக்கு சொந்தமான இடம் என்று கூறியுள்ளனர். இதனால் பொது மக்களுக்கும்,தனி

நபர்களுக்கும் இடையே பிரச்னை ஏற்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து அப்பகுதியை சேர்ந்த பொதுமக்கள் மற்றும் இளைஞர்கள், விருத்தாசலம் கோட்டாட்சியர் அலுவலகத்தில் கோரிக்கை மனு அளித்தனர் அதில் சுமார் 80 ஆண்டு காலமாக பட்டியலின மக்கள் வாழக்கூடிய நிலையில் பொது மக்களுக்கு சொந்தமான 20 சென்ட் இடம் இருந்து வந்தது.

இந்த நிலையில் அந்த இடத்தை தனி நபர்கள்

பட்டாசெய்து விட்டோம்.ஆகையால் இங்கு யாரும் வரக்கூடாது என எதிர்ப்பு தெரிவிக்கின்றனர். எனவே இந்த அரசு புறம்போக்கு நிலத்தை தனிநபர்கள் ஆக்கிரமிப்பை கண்டித்தும், அதனை பட்டா செய்து கொடுத்த அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை மனு அளித்தனர்.மனுவை பெற்றுக்கொண்ட கோட்டாட்சியர் விஷ்ணு பிரியா,உரிய விசாரணை மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பதாக கூறினார்.



நாமக்கல் மாவட்டம் குமாரபாளையம் ராஜம் தியேட்டரில் அருகில் உள்ள பாசம் அறக்கட்டளையில் அறக்கட்டளையின் நிறுவனர்கள்.குமார், தீபா, பராசக்தி, அவர்கள் சார்பாக முதியோர் இல்லத்தில் இன்று பொங்கல் வைத்து 150 பள்ளி மாணவ, மாணவிகளுக்கு புத்தாடை வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் சி ஸ்ரீ வித்யாம்பிகை சமூக நலத்துறை பணியாளர்கள் மற்றும் கிராம நிர்வாக அலுவலர் தியாகராஜன், மக்கள் நீதி மய்யம் சித்ராபாபு,நில முகவர் தலைவர் சின்னச்சாமி, தளிர்விடும் பாரதம் தலைவர் சீனிவாசன் பிரபு, சரண்யா, தமிழ்செல்வி, வரதராஜ், தனசேகரன், பழனிசாமி, சம்ரிதி, பன்னீர்செல்வம், பொதுமனித சமூக சேவை மாநில செயலாளர் அரிச்சந்திரன் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# அதிமுக ஆட்சி அமைந்த உடன் தென்காசி கலெக்டர் அலுவலகம் திறக்கப்படும்

## அதிமுக மாவட்ட செயலாளர் செல்வ மோகன்தாஸ் பாண்டியன் உறுதி



வீரகேரளம்புதூரில் அதிமுக சார்பில் முன்னாள் முதலமைச்சர் எம்ஜிஆர் பிறந்த நாள் விழா பொதுக்கூட்டம் நடைபெற்றது கூட்டத்திற்கு தென்காசி தெற்கு மாவட்ட அதிமுக செயலாளர் முன்னாள் எம்எல்ஏ செல்வ மோகன்தாஸ் பாண்டியன் தலைமை வகித்து சிறப்புரை யாற்றினார், அப்போது அவர் பேசியதாவது மக்கள் நலத்திட்டங்களை புரட்சி தலைவர் எம்ஜிஆர் மற்றும் ஜெயலலிதா ஆகியோர் கொண்டுவந்தனர்பிறந்த குழந்தை முதல் முதியவர்கள் வரை நலத்திட்ட உதவிகள் வழங்கினர் அதனை எடப்பாடி பழனிச்சாமி முதலமை ச்சராக இருந்த போது தீவிரமான செயல் படுத்தினார்

அந்த மக்கள் நலத் திட்டங்கள் திமுக அரசு நிறுத்தியும் பெயர் மாற்றம் செய்தும் வருகிறது. அதிமுக ஆட்சியில் நிறைவேற்றப்பட்ட திட்டங்களில் திமுக நிறுத்திய அனைத்து திட்டங்களையும் மீண்டும் எடப்பாடி பழனிச்சாமி முதலமைச்சராக பொறுப்பேற்று நிறைவேற்றிதருவார்.அதிமுக ஆட்சி அமைந்ததும் தென்காசி கலெக்டர் அலுவலகம் திற க்கப்படும் வீரகேரளம்புதூரில் அரசு மருத்துவமனை கட்டப்படும் என்று பேசினார் மாவட்ட அவைத் தலைவர் சண்முகசுந்தரம்,இணைச் செயலாளர் முத்துலட்சுமி, துணைச் செயலாளர் வீரபாண்டியன் மாவட்ட பொருளாளர் லாட சன்னியாசி (எ) சாமிநாதன், பொதுக்குழு உறுப்பினர்கள் கசமுத்து, பாண்டியராஜ், முன்னிலை கீழப்பாவூர் வடக்கு ஒன்றிய செயலாளர் அமல்ராஜ் வரவேற்றார், தெற்கு ஒன்றிய செயலாளர் குணம் (எ) உத்திரகுணபாண்டியன், தொகுத்து வழங்கினார் தலைமை கழக பேச்சாளர்தியாகராஜன், மாவட்ட அம்மாபேரவை செயலாளர் முன்னாள் எம்பி கேஆர்பி பிரபாகரன் கழகபேச்சாளர் பாலமுருகன் ஆகியோர் சிறப்புரையாற்றினர் நிர்வாகிகள் முருகையா பாண்டியன், கார்த்திக் குமார், ஜனதா, சேப்பாராஜ்,அகமது ஷா,கிருஷ்ணசாமி, ராமசாமி (எ) தமிழ் செல்வன், ராமையா, கந்தசாமி பாண்டியன், சங்கரபாண்டியன், இருளப்பன், பாண்டியன், அருவேல்ராஜ்,முருகேசன்,பாலகிருஷ்ணன், சுரண்டை சங்கர்,தென்காசிசுடலை, கணேஷ் தாமோதரன், காத்தவராயன், ஜெயராமன், சுப்பிரமணியன், உள்ளிட்டோர் கலந்து கொண்டனர் கீழப்பாவூர் வடக்கு ஒன்றிய துணைச் செயலாளர் முருகன் நன்றி கூறினார்

# உளுந்தூர்பேட்டை அருகே உள்ள அஜிதஸ்நகர் ஜிஎஸ்டி சாலையில் உள்ள மேம்பாலத்தில் அடுத்தடுத்து வந்த மூன்று அதிநவீன குளிர்சாதனப் பேருந்துகள் மோதி ஓட்டுநர் இருவர் உட்பட 10 பேர் படுகாயம்



கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை அருகே உள்ள அஜிஸ்நகர் தேசிய நெடுஞ்சாலை மேம்பாலத்தில் திருச்சியில் இருந்து சென்னைக்கு பதப்படுத்தப்பட்ட கால்நடை தோல் ஏற்றி வந்த லாரி ஓட்டுநரின் கட்டுப்பாட்டை இழந்து தடுப்பு கட்டையை உடைத்து பாலத்தின் நடுவே கவிழ்ந்து விபத்துக்குள்ளானது இதனைத் தொடர்ந்து சென்னையில் இருந்து ஆலங்குளம் நோக்கி சென்ற ஒரு பேருந்து விபத்துக்குள்ள நான் லாரியில் மோதியது இதைத் தொடர்ந்து பின்னால் வந்த மற்றொரு சொகுசு பேருந்தும் அதனைத் தொடர்ந்து பின்னால் வந்த குமுளி செல்லும் அதிநவீன குளிர்சாதன பேருந்து ஒன்றின் பின் ஒன்றாக மோதி விபத்துக்குள்ளானது இந்த விபத்தில் குமுளி சென்ற பேருந்து ஓட்டுநர் இருவர் உட்பட இதேபேருந்து பயணம் செய்த பேருந்து பயணிகள் 10 பேர் படுகாயம் அடைந்தனர். காயம் அடைந்தவர்கள் உடனடியாக அமைக்கப்பட்டு உளுந்தூர்பேட்டைஅரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். இதனைத் தொடர்ந்து விபத்து பற்றி தகவல்தெரிந்துவிரைந்து வந்த எடைக்கல் போலீசார் விபத்து குறித்து விசாரணை மேற்கொண்டனர். இந்த விபத்தின் காரணமாக சென்னை திருச்சி நான்கு வழி சாலையில் சிறிது நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது தொடர்ந்து எடைக்கால் போலீசார் மற்றும் உளுந்தூர்பேட்டை போக்குவரத்து போலீசார் விபத்து நடந்த இடத்திற்கு விரைந்து சென்று போக்குவரத்து நெரிசலை கட்டுப்படுத்த மாற்று பாதையில் வாகனங்களில் திருப்பி ஸவிட ஏற்பாடு செய்து வாகனங்களை மாற்றுப்பாதையில் அனுப்பி வைத்தனர் இதனால் சிறிது நேரம் பரபரப்பும் போக்குவரத்து நெரிசலும் காணப்பட்டது இதனை தொடர்ந்து விபத்தில் படுகாயம் அடைந்தவர்களை மீட்டு உளுந்தூர்பேட்டை அரசு மருத்துவமனையில் ஆம்புலன்ஸ் மூலம் சிகிச்சைக்காக அனுப்பி தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றனர்.

# குடியரசு தினத்தன்று கிராம சபை கூட்டம் நடைபெறும்

## கலெக்டர் ச.கந்தசாமி தகவல்



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி செய்திக்குறிப்பு- ஈரோடு மாவட்டத்திலுள்ள அனைத்து கிராம ஊராட்சிகளிலும் 26.01.2026 குடியரசு தினத்தன்று முற்பகல் 11.00 மணிக்கு கிராம சபைக் கூட்டங்கள் நடைபெற உள்ளன. கூட்டம் நடைபெறும்இடம்,நேரம்,ஆகியனதொடர்புடைய கிராம ஊராட்சிகள் மூலம் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படும்.

2026 ஜனவரி 26-ஆம் தேதியன்று (குடியரசு தினம்) நடைபெறும் கிராம சபைக் கூட்டத்தில் கிராம ஊராட்சி நிர்வாகம் மற்றும் பொதுநிதி செலவினம் (01.04.2025 முதல் 31.12.2025 முடிய) குறித்து விவாதித்தல், கிராம ஊராட்சியின் தணிக்கை அறிக்கை பார்வைக்கு வைத்து ஒப்புதல் பெறுதல், கொசுக்கள் மூலம் பரவும் டெங்குகாய்ச்சல்தடுப்புநடவடிக்கைகள் குறித்து விவாதித்தல்,மக்கள்திட்டமிடல்இயக்கம்மூலம் 2026-2027 ஆம் நிதியாண்டிற்கான கிராம வளர்ச்சித் திட்டத்திற்கு ஒப்புதல் பெறுதல், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் தொழிலாளர் வரவு-செலவு திட்டத்தினை 31.12.2025-ஆம் தேதி வரையிலான முன்னேற்ற அறிக்கையுடன் ஒப்பிட்டு விவாதித்தல், மற்றும் 2026-2027 ஆம் ஆண்டுக்கான தொழிலாளர் வரவு-செலவு திட்டத்திற்கு பணிகள் தேர்வு செய்தல் குறித்து விவாதித்தல், நலிவு நிலை குறைப்பு நிதி முன்னேற்ற விபரம் தெரிவித்தல், தூய்மை பாரத இயக்க(ஊரகம்)திட்டம்,ஜல்ஜுவன்திட்டம்,சிறு பாசன ஏரிகள் புதுபித்தல் குறித்த விவரம், தொகுதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் இதர பொருட்கள் உள்ளிட்ட கூட்டப்பொருட்கள் விவாதிக்கப்படும்.

அனைத்து கிராம ஊராட்சிகளிலும் கிராம சபைக்கூட்டங்கள் முறையாகநடைபெறுவதைக் கண்காணிக்கும் பொருட்டு வட்டார அளவில் உதவிஇயக்குநர்நிலையில்பற்றாளர்கள்மற்றும் ஊராட்சி அளவிலான பற்றாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர் என மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தெரிவித்துள்ளார்.

# மன ரீதியாக நன்றாக இருப்பதே ஆரோக்கியம்

## தேவகோட்டை சேர்மன் மாணிக்கவாசகம் நடுநிலைப் பள்ளியில் அரசு மருத்துவர் அறிவுரை

தேவகோட்டை - சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை சேர்மன் மாணிக்கவாசகம் நடுநிலைப்பள்ளியில்அரசுஆரம்பசுகாதாரநிலைய மருத்துவர் மாணவர்களுக்கு அறிவுரைகள் வழங்கினார். மாணவர்களுக்கு சுத்தம் மற்றும் ஆரோக்கியம் தொடர்பான அறிவுரைகளை வழங்கினார்.

ஆசிரியை முத்துலட்சுமி வரவேற்றார். தலைமையாசிரியர் லெ .சொக்கலிங்கம் தலைமை தாங்கினார். கண்ணங்குடி அரசு ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர் கெவின் ஆபிரகாம் மாணவர்களுக்கு விரிவான மருத்துவ ஆலோசனைகளை எடுத்துக் கூறினார்.

கண்ணங்குடி அரசு மருத்துவர் யாழிசை ,கண் மருத்துவ அலுவலர் மகேஸ்வரி ,செவிலியர்



உமாமகேஸ்வரி , மருந்தாளுனர் கனிமொழி ஆகியோர் பங்கேற்றனர். அரசு மருத்துவர் கெவின் ஆபிரகாம் மாணவர்களின் பல்வேறு கேள்விகளுக்கும், சந்தேகங்களுக்கும் பதில் கூறினார். அவர் மாணவர்களிடம் பேசுகையில், ஆரோக்கியம் என்றால் எந்த நோயும் இல்லாமல் இருப்பது என்று நாம் நினைக்கிறோம். ஆனால் மன ரீதியாக ஆரோக்கியமாகஇருக்கவேண்டும்.மனரீதியாகவும் ஆரோக்கியமாக இருப்பதோடு சமூகத்துடனும் ஒத்துப் போகவேண்டும். நம் உடல் இங்கேயேதான் இருக்கும். நம்முடைய மனது வேறு எதையோ நினைக்கும். நாம் யாருடனும் சண்டை போடாமல் அன்பாக இருக்கவேண்டும். சில மாணவர்கள் சொல்வார்கள் இவன் யாரிடமும் பேச மாட்டான், சண்டை போடுவான் என்று சொல்வார்கள். அப்படி என்றால் அந்த மாணவர் மன ரீதியாக பாதிக்கப்பட்டுள்ளார் என்று அர்த்தம். காலையில் எழுந்தவுடன் பல் துலக்க வேண்டும். மேலும் கீழும் டூத் பிரஷ் படுமாறு பற்களை நன்றாக விளக்கவேண்டும். அப்பொழுதுதான் பற்களில் மாட்டியிருக்கும் துகள்கள் வெளியே வரும்.

கைகளை நன்றாக சோப்பு போட்டு கழுவ வேண்டும்.மேற்புறம்,உள்ளங்கைஇருகைகளிலும், இடுக்குகளிலும் சோப்பு போட்டு நன்றாக கழுவவேண்டும். பிளாஸ்டிக் பாட்டிலில் தண்ணீர் குடிக்கக் கூடாது. இவ்வாறு மருத்துவர் கெவின் ஆபிரகாம் மாணவர்களிடம் பேசினார்.

## கேரளாவில் இருந்து அண்ணாச்சி பழம் ரோடு ஏற்றி வந்த லாரி

# ஜிஎஸ்டி சாலையில் விவசாயி மீது மோதிவிட்டு சாலையின் நடுவே இருந்த தடுப்பு கட்டையில் மோதி கவிழ்ந்து



கேரளாவில் இருந்து ஈச்சர்லாரி ஒன்று அண்ணாச்சிபழம்லோடுஏற்றிக்கொண்டு சென்னை கோயம்பேடு மார்க்கெட்டுக்கு சென்று கொண்டிருந்தது இந்த லாரியை கேரள மாநிலம்இடுக்கியைச்சேர்ந்த ஆனந்தன் வயது 25 என்பவர் ஓட்டி வந்தார் இந்த லாரி கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை அருகே உள்ள பாமேஸ்வரி மங்கலம் ஜிஎஸ்டி சாலையில் சென்றபொழுது இருசக்கர வாகனத்தில் சென்ற தம்பதி சாலையை கடக்க முயன்ற இப்பொழுது இருசக்கர வாகனத்தின் மீது மோதாமல் இருப்பதற்காக ஆனந்தன் லாரியை வலது பக்கமாக திருப்பிய பொழுது சாலையின் நடுவே நின்று கொண்டிருந்த நாராயணசாமி வயது 66 என்ற விவசாயி மீது மோதி சாலையின் நடுவே இருந்த தடுப்புக் கட்டையில் மோதி கவிழ்ந்து விபத்துக்குள்ளானது இதில் நாராயணசாமி என் விவசாயி சம்பவ இடத்திலேயே பலத்த காயமடைந்து உயிரிழந்தார் மேலும் அந்த லாரி சாலையின் நடுவே இருந்த தடுப்பு கட்டையில் மோதி கவிழ்ந்து விபத்துக்குள்ளானது இதில் லாரி ஓட்டுநர் ஆனந்தன் காயம் அடைந்தார் இந்த விபத்தால் லாரியில் இருந்த அண்ணாச்சி பழங்கள் சாலையில் சிதறி கிடந்தது இந்த விபத்தின் காரணமாக சேலம் உளுந்தூர்பேட்டை 4 வழி சாலையில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது விபத்து பற்றி தகவல் அறிந்த எலவனாசூர்கோட்டை போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று போக்குவரத்தை சரி செய்யும் பணியில் ஈடுபட்டனர் மேலும் இந்த விபத்து குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர் விசாரணையில் லாரி ஓட்டுநர் ஆனந்தன் லாரியை அதிவேகமாகவும் அஜாக்கிரவையாகவும் ஓட்டி வந்ததும் விபத்துக்கு காரணம் என போலீசார் தெரிவித்தனர்.இந்த விபத்து ஏற்பட்ட பொழுது சாலையில் கவிழ்ந்து தரவென லாரி கவிழ்ந்து ஓடும் சிசிடிவி காட்சிகள் தற்போது வெளியாகி உள்ளது.

# ஆலங்குளம் சர்தார் ராஜா பொறியியல் கல்லூரியில் பொங்கல் விழா கொண்டாட்டம்



தென்காசி மாவட்டம் ஆலங்குளம் சர்தார் ராஜா பொறியியல் கல்லூரியில்தமிழர்திருநாளான பொங்கல் விழா பாரம்பரிய முறையில் மிகுந்த உற்சாகத்துடன் கொண்டாடப்பட்டது. இவ்விழாவிற்கு கல்லூரியின் தலைவர் ஜீசஸ் ராஜா தலைமை தாங்கி சிறப்பித்தார். கல்லூரியின் முதல்வர் முனைவர் ஜெயக்குமார் முன்னிலை வகித்தார். கல்லூரி நிர்வாக இயக்குனர் பேராசிரியர் கனக பாண்டியன் விழாவினை தொடங்கி வைத்து பொங்கல் விழாவின் முக்கியத்துவம் குறித்து வாழ்த்துரை வழங்கினார்.


விழாவின் சிறப்பு அம்சமாக மாணவ மாணவிகள் மிகுந்த ஆர்வத்துடன் பொங்கல் வைத்து தமிழர்களின் பாரம்பரியத்தையும் பண்பாட்டையும் வெளிப்படுத்தினர்.

இந்நிகழ்வில் மாணவ மாணவியர் பாரம்பரிய உடைகள் அணிந்து நிகழ்ச்சியில் கலந்து கொண்டது விழாவிற்கு கூடுதல்சிறப்பைஅளித்தது.

தொடர்ந்து மாணவ மாணவிகள் மற்றும் பேராசிரியர்கள் பங்கேற்கும் வகையில் பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டன. இப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகள் மற்றும் பேராசிரியர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.பரிசளிப்பு நிகழ்வில் கல்லூரி நிர்வாகிகள் கலந்து கொண்டு வெற்றியாளர்களை பாராட்டினர். இந்த பொங்கல் விழாவின் மூலம் மாணவர்கள் இடையே தமிழர் பண்பாடு பாரம்பரியம் மற்றும் ஒற்றுமை உணர்வை மேம்படுத்துவதாககல்லூரிநிர்வாகம் பெருமையுடன் தெரிவித்தது. விழாவின் நிறைவில் அனைவருக்கும் கரும்பு மற்றும் இனிப்புபொங்கல்வழங்கப்பட்டது.

## மதுராந்தகத்தில்

# பாரத பிரதமர் நரேந்திர மோடி வருகை பொதுக்கூட்டம்; தமிழ் மாநில காங்கிரசார் பேனர் வைக்கும் பணி தீவிரம்




செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகத்தில் வருகின்ற 23ஆம் தேதி பாரதப் பிரதமர் நரேந்திர மோடி வருகையை பொதுக்கூட்டம் பணி தீவிரமாக நடைபெறும் நிலையில் தமிழ் மாநில காங்கிரசார் சுவர் விளம்பரம் மற்றும் பிரம்மாண்ட பேனர் அமைக்கும் பணியினை செய்து வருகின்றனர்.

மதுராந்தகத்தில் வருகின்ற23ஆம்தேதிதேசிய ஜனநாயக கூட்டணி சார்பில் அறிவிப்பு பொதுகூட்டம் நடைபெற உள்ளது. இதில் பாரத பிரதமர் நரேந்திரமோடி எதிர்கட்சி தலைவர் எடப்பாடி பழனிச்சாமி தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் தலைவர் ஜி. கே.வாசன்,

உள்ளிட்ட கூட்டணி கட்சி தலைவர்கள் கலந்து கொள்ள உள்ளனர். இதற்காக 40 ஏக்கர் பரப்பளவில் மேடை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது இந்நிலையில் தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் தலைவர்

ஜி . கே . வாசன் ஆணைக்கிணங்க காஞ்சி தெற்கு மாவட்ட தலைவர் மலையூர் புருஷோத்தமன் ஆலோசனைப்படி மாநில இளைஞரணி செயலாளர்

செங்கல்பட்டு தெற்கு மாவட்டம் எடையாளம் சங்கர் ஏற்பாட்டில் சுவர் விளம்பரம் மற்றும் பேனர் அமைக்கும் பணியினை செய்து வருகின்றனர். இதில் கட்சியின்

பொறுப்பாளர்கள் நிர்வாகிகள் பலர் உடனிருந்தனர்.

## ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி

# சத்தியமங்கலம் பகுதியில் "உங்க கனவு சொல்லுங்க" திட்டத்தின் முதன்மையான மூன்று தேவைகளையும் பூர்த்தி செய்த விண்ணப்பபடிவங்களை தன்னார்வலர்கள் மூலம் திரும்ப பெறும் பணியினை பார்வையிட்டு ஆய்வு செய்தார்



ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம், ராஜன் நகர் பகுதியில் நேற்று (20.01.2026) மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி "உங்ககனவசொல்லுங்க" திட்டத்தின் முதன்மையான மூன்று தேவைகளையும் பூர்த்தி செய்த விண்ணப்பபடி வங்களை தன்னார்வலர்கள் மூலம் திரும்ப பெறும் பணியினை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 09.01.2026 அன்று "உங்க கனவசொல்லுங்க" என்ற நிகழ்ச்சியினை தொடங்கி வைத்ததை தொடர்ந்து, நந்தா கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி அவர்கள் "உங்க கனவ சொல்லுங்க" திட்டத்தின் விண்ணப்பபடிவங்களை தன்னார்வலர்களுக்கு வழங்கி பணியினை தொடங்கி வைத்தார்.

அதன்படி,பொதுமக்களுடைய தனிப்பட்ட கோரிக்கைகளுக்கு மட்டுமல்லாமல்,பொதுப்பிரச்சினைகளுக்கும் தீர்வு காணும் வகையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கவனத்திற்கு செல்லப்படும் வகையில் இத்திட்டம் செயல்படுகிறது.

ஈரோடு மாவட்டத்தில் உள்ள பத்து தாலுகாவில் 1,270 ரேசன் கடைகளில் உள்ள குடும்ப அட்டைகளில் ஊரக பகுதியில் 3,97,683 குடும்பங்கள் மற்றும் நகர்ப்புற பகுதியில்2,38,026குடும்பங்கள் ஆக மொத்தம் 6,35,709 குடும்பங்களுக்கு "உங்க கனவசொல்லுங்க" என்ற விரிவான கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட உள்ளது. இக்கணக்கெடுப்பின் நோக்கம் பல்வேறு அரசுத் துறை நலத்திட்டங்களின் தற்போதைய நிலை, உண்மையில் சென்றடைந்துள்ள நிலை, திட்டங்களின் செயல்திறன் மற்றும் தாக்கம்,மக்களின் மக்களைபூர்த்தி செய்யப்படாத தேவைகள், மக்களின் வளர்ந்து வரும் முன்னுரிமைகள் கண்டறிதல் மற்றும் புதிய முயற்சிகளை முன்மொழிதல் ஆகும்.

கணக்கெடுப்பிற்கு சுய உதவிக்குழு உறுப்பினர். குறைந்தபட்சம் பன்னிரண்டாம் வகுப்பு தேர்ச்சி, கைபேசி செயலி பயன்படுத்த அறிந்திருத்தல், மற்றும் கணக்கெடுப்பு செய்வதில் விருப்பம் 500 குடும்ப அட்டைக்கு ஒரு தன்னார்வலர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். அதன்படி ஈரோடு மாவட்டத்தில் 1,322 தன்னார்வலர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

தன்னார்வலர்கள் ஒவ்வொரு வீட்டிற்கும் நேரடியாக சென்று படிவம் கொடுத்து அவர்களை பூர்த்தி செய்ய விளக்கம் கொடுக்க வேண்டும். பின்பு இரண்டுநாட்கள்கழித்து குடும்ப உறுப்பினர்கள் இருக்கும் நேரத்திற்கு சென்று அவர்களிடம் உரையாடி விவரங்கள் சேகரிக்க வேண்டும். அதன் பிறகு TNeGA உருவாக்கியகைப்பேசிசெயலியில் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும். தன்னார்வலரின் ஒரு நாளைக்கு குறைந்தபட்சம் நகர்பகுதிகளில் 50 குடும்பங்களிலும், ஊரக பகுதியில் 30 குடும்பங்களிலும் தகவல்கள் சேகரித்து கைப்பேசியில் உள்ளீடு செய்த பின்னர் உருவாகும் பிரத்தியேக எண்ணை கனவு அட்டையில் எழுதி புகைப்படம் எடுத்துக்கொண்டு குடும்பத்தாரிடம் ஒப்படைக்க வேண்டும். தன்னார்வலர்கள் தினசரி எடுக்கபடும் தகவல்களை ஊரக பகுதிக்கு ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிற்கும் மற்றும் நகரப்பகுதிக்குபகுதி அளவிலான கூட்டமைப்பிற்கும் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும். இக்கணக்கெடுப்பின் மூலம் இதுவரை மக்கள் பெற்ற பயன்கள், அரசு நலத்திட்டங்களில் மிகவும் பயனுள்ளதாக கருதும் மூன்றுதிட்டங்கள் தங்களது குடும்பத்தின் மேம்பாட்டிற்கு 2030 ஆம் ஆண்டிற்குள் அரசு பூர்த்தி செய்ய வேண்டிய முதன்மையான மூன்று தேவைகளையும் குறிப்பிட வேண்டும்.

நேற்றைய தினம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் "உங்க கனவு சொல்லுங்க" விண்ணப்ப படிவத்தினை பொது மக்களிடம் வழங்கி முதன்மையான மூன்று தேவைகளையும் பூர்த்தி செய்த விண்ணப்பங்களைதன்னார்வலர்கள் மூலம் திரும்ப பெறும் பணியினை பார்வையிட்டு, ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின்போது, துறைசார்ந்தஅலுவலர்கள் கலந்துகொண்டனர்.

## தூத்துக்குடி மதுரா கோட்ஸ் நில விவகாரம் விஸ்வரூபம் எடுத்துள்ள நிலையில்

# அரசு நிலத்தை வேலவன் பிராப்பர்ட்டீஸ்க்கு விற்றதில் முறைகேடு உள்ளது என்று நிர்வாகக் குழு தலைவர் அலங்கார பரதர் குற்றச்சாட்டு




தூத்துக்குடி மதுரா கோட்ஸ் நில விவகாரம் விஸ்வரூபம்எடுத்துள்ள நிலையில்அரசுநிலத்தை வேலவன் பிராப்பர்ட்டீஸ்க்கு விற்றதுஏன்?எனவும்,முறைகேட்டில் அரசு அதிகாரிகள் மற்றும் ஆளும் கட்சி பிரமுகர்கள் துணை போவதாகவும் மதுரா கோட்ஸ் மீட்பு தலைமை நிர்வாகக் குழு தலைவர் வி.அலங்கார பரதர் குற்றம் சாட்டினார்.

இதுதொடர்பாகஇன்று தூத்துக்குடி பிரஸ்கிளப்பில் செய்தியாளார்களை சந்தித்த மதுரா கோட்ஸ் மீட்புதலைமைநிர்வாகக் குழு தலைவர் வி.அலங்கார பரதர், செயலாளர் கிதர் பிஸ்மி, பொருளாளர் மை.காதர் பாட்ஷா, ஒருங்கிணைப்பாளர் தூத்துக்குடி சம்சுதீன், நிர்வாக குழு உறுப்பினர் கண்ணன் ஆகியோர் அளித்த பேட்டியில் தெரிவித்ததாவது: தூத்துக்குடி வடக்கு கடற்கரை சாலை, முத்துநகர் பூங்கா எதிர்புறமுள்ள மதுராகோட்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்கு சொந்தமான (சர்வே எண் 240–278 வார்டு எண் 6 பகுதி எண் 2 ஏக்கர் 4.67) கட்டடத்தை தூத்துக்குடியில் பிரபல தொழில் நிறுவனமான வேலவன் ஹைப்பர் மார்க்கெட் நடத்தி வரும் உரிமையாளரும் மற்றும் சிலரும் சேர்ந்து வேலவன் பிராபர்டிஸ் (VELAVAN PROPERTIES) என்ற பெயரில் பொது விற்பனைக்கு கொண்டு வந்தார்கள் அதை 8.11.25 மற்றும் 9.11.25 தேதிகளில்விற்பனைமுன்பதிவு மேளா என்ற நிகழ்ச்சியை நடத்தினார்கள். மதுராகோட்ஸ் கட்டிடத்தையே இடிக்காமல் முன்பதிவு செய்ய தொடங்கினார்கள்.தினசரி நாளிதழ், வானொலி, வலைதள விளம்பரம், டிஜிட்டல் விளம்பரம், சுவரொட்டிகள், வாகன கானொலி என மக்கள் பிரமிக்கும் அளவிற்கு விளம்பரப்படுத்தினார்கள்.

இவ்வகையான பொது விளம்பரம் நிலவியல் சட்ட விரோதம் என்று நாங்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலக மனுநாளில் (10.11.2025) மனு கொடுத்தோம் அதன் அடிப்படையில் (னுவுஊP) மாவட்ட நகர ஊரமைப்பு இயக்கம் அதிகாரி மேற்படி நில முன்பதிவு நடக்கும் இடத்திற்கு வந்து நேரில் பார்வையிட்டு இனிமேல் னுவுஊP அனுமதியில்லாமல்நீங்கள் முன்பதிவு செய்யக்கூடாது என்றும் விளம்பரங்களை உடனே அகற்றுங்கள் என்றும் உத்திரவிட்டார். மேலும் மேற்படி மதுராகோட்ஸ் கட்டிடம் (ஊசுணு) கடலோர ஒழுங்குமுறை சட்டத்திற்கு புறம்பாக அமைந்துள்ளது. மேலும் மேற்படி கட்டிடத்தில் பூமிக்கடியில் சுரங்கம் இருப்பதாக சொல்லப்படுகிறது. அதற்கு (னுபுஆ) தமிழ்நாடு சுரங்க நிலவியல் துறையின் அனுமதி தேவை. இவை அனைத்தையும் அலட்சியப்படுத்தி விட்டு முன்பதிவு செய்ய தொடங்கிய வேலவன் பிராபர்டிஸ் மீது பலசந்தேகங்கள் வர ஆரம்பித்தன.இந்தகாலகட்டத்தில் முறையான முன்பண கிரைய பதிவு மதுராகோட்ஸ்ஸோடு மேற்படி வேலவன் பிராபர்டிஸ் செய்து கொள்ளவில்லை, ஆகையால் மேலும் மேலும் பல சந்தேகங்கள் உருவாக ஆரம்பித்தன. அதனடிப்படையில் நாங்கள் தூத்துக்குடி மதுராகோட்ஸ் மீட்பு தலைமைக்குழு அமைத்து போராட தொடங்கினோம்.

தூத்துக்குடி மதுரா கோட்ஸ் கட்டிடம் அதை சார்ந்த நிலம் முதலில் யாருடையது. அரசுடையதா? அல்லது மதுரா கோட்ஸ் உடையதா? என கேள்வி எழும்பியது. ஏனென்றால் லேண்ட் மார்க் அரசு பதிவேட்டில் மதுராகோட்ஸ் நிலம் அரசு புறம்போக்கு நிலம் என்றும் பட்டா இல்லை என்றும் ஆவண பதிவு இப்போதும் வருகிறது. ஆகவே மேலும் எங்களின் போராட்டம் வலுப்பெற்றது.

அதாவது 10.11.2025 தூத்துக்குடி மாவட்ட ஆட்சி அலுவலகதிங்கள் மனு, 13.11.2025 தகவல் பெ.உ.ச மனு நாள் 13.11.2025 கட்டிட இடிப்பு குறித்து தகவல் பெற, 17.11.2025 மீண்டும் தூத்துக்குடி மாவட்ட அலுவலக திங்கள் மனு,19.11.2025 மதுராகோட்ஸ் பத்திர நகல் கேட்டு 14.11.2025ல் மனு செய்ததற்கு நொறுங்கிய நிலையில் உள்ளது என்ற பதிவு 05.12.2025, தூத்துக்குடி மாநகராட்சி ஆணையரிடம் மதுராகோட்ஸ் கட்டிடம் இடிக்கக் கூடாது என கோரிக்கை மனு.05.12.2025 மதுராகோட்ஸ் நிர்வாகம் வேலவன் பிராபர்டிஸ் நிர்வாகத்திடம் அட்வான்ஸ் வாங்கியது.

31.12.2025 தூத்துக்குடி பத்திர அலுவலகத்தில் எந்த அடிப்படையில் மதுரா கோட்ஸ் நிர்வாகம் வேலவன் பிராபர்டிஸ்க்கு அட்வான்ஸ் வாங்க சம்மதித்தது என்ற ஆவணம் எடுக்கப்பட்டது. 05.01.2026 தூத்துக்குடியில் 31.12.2025ல் பத்திர அலுவலகத்தில் எடுத்த ஆவணம் வாசிக்க முடியாததால் மதுரையில் அதே ஆவணத்தை எடுத்தோம்.

07.01.2026அதேமதுரை பத்திர அலுவலகத்தில் சர்வே எண்ணில் ஆன்லைனில் பதிவு செய்து எடுத்தது (முரண்;பாடு 100% உள்ளது)

09.01.2026 இந்த முரண்பாடு அடிப்படையில் தூத்துக்குடி கீழூர் பத்திர பதிவு பதிவாளரிடம் இனிமேல் மேற்படி சர்வே எண்களில் உள்ள இடத்தை பதிவு செய்ய வேண்டாம் எனதடங்கல் மனு கொடுத்து கையொப்பம் பெற்று கொண்டோம்.இப்படி ஏகப்பட்ட தடுப்பு நிலைகளை எங்கள் தூத்துக்குடி மதுராகோட்ஸ் மீட்பு தலைமைக்குழு செய்து கொண்டிருக்கிறது. இந்த நிலையில் சர்வ கட்சிகளிடம் இது குறித்து எடுத்து செல்ல இருக்கிறோம்.

மேலும் தூத்துக்குடி மதுராகோட்ஸ் நிலம் அரசு நிலமாக இருப்பின் அந்தகட்டிடத்தைஇடிக்காமல் நல்லதொரு நீதிமன்றம்,கல்லூரி,அருங்காட்சியகம் போன்றவற்றை உருவாக்கி தூத்துக்குடியின் முக்கிய நினைவு சின்னமாக அது தூத்துக்குடி கோரல் மில் என்றபெயரில் நிறுவிட வேண்டும் என்ற அரசிடம் கோரிக்கை வைக்க இருக்கிறோம்.

முதலில் மதுராகோட்ஸ் நிலத்தை மீட்டெடுக்க நடவடிக்கை தூத்துக்குடி மாவட்ட நிர்வாகம்செய்யவேண்டும். கடந்த 60 நாட்களுக்கு முன் இருந்து பல மனுக்கள் கொடுத்தும் மாவட்டநிர்வாகம்அதை அலட்சியப்படுத்தியதால் கோடிக்கணக்கான கட்டிட இருப்பு சொத்துக்கள் இரவோடு இரவாக கொள்ளைப் போய் கொண்டிருக்கிறது.

இதில் ஆளுங்கட்சியின் மிகப் பெரிய அரசியல்வாதிகள் திரைமறைவாக இக்கட்டிடத்தை இடித்து பிளாட் போட வேலைசெய்கிறார்கள் என்று பொது மக்களால் பேசப்படுகிறது. இது தமிழக அரசை ஆளும் திராவிட முன்னேற்ற கழகத்திற்கு மிகப் பெரிய கெட்டப் பெயரை உருவாக்குவதோடு சட்டமன்ற தேர்தலின் வெற்றியை கேள்விக்குறியாக்கும்" எனவேதமிழக முதல்வர் இதில் தலையிட்டு மதுரா கோட்ஸ் நிலத்தை மீட்க உத்தரவிட வேண்டும்" என கூறினர்.

முன்னதாக நேற்று மதுரா கோட்ஸ் தொடர்பான அரசு நில விவகாரத்தில், மதுரா கோட்ஸ் அரசு நில மீட்பு குழுவினர் 1947 முதல் தற்போதுவரை உள்ள நில ஆவணங்களை தூத்துக்குடி மாவட்ட சார் ஆட்சியாளரிடம் ஒப்படைத்தனர்.

கடந்த 5ம் தேதி சார் ஆட்சியாளரை சந்தித்த போது, இந்த நிலம் தொடர்பாக மேலும் ஆவணங்கள் இருந்தால் வழங்குமாறு அறிவுறுத்தப்பட்டதன் அடிப்படையில், அனைத்து ஆவணங்களும் நேற்று சமர்ப்பிக்கப்பட்டதாக குழுவினர் தெரிவித்தனர்.

## ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி

# சத்தியமங்கலம் தாளவாடி பகுதியில் ரூ.94.29 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள பல்நோக்கு சமுதாய கூடத்தினை திறந்து வைத்து பார்வையிட்டார்




ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் தாளவாடி ஆசனூர், ஒசட்டி பகுதியில் நேற்று (20.01.2026) மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி ரூ.94.29 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள பல்நோக்கு சமுதாய கூடத்தினை திறந்து வைத்து பார்வையிட்டார்.

வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற மேம்பாட்டுக் கழகத்தின் சார்பில் சமூக பொறுப்பு நிதியிலிருந்து ரூ.94.29 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள இந்த பல்நோக்கு சமுதாய கூடமானது ஒன்பது கிராமங்களைச் சேர்ந்த 550 மக்களுக்கு பயனளிக்கும் வகையில் உள்ளது.

மேலும் இந்த சமுதாய கூடம் சமூகநிகழ்வுகளை நடத்துவதற்கும், சுய உதவிக்குழு உறுப்பினர்கள் தங்கள் தயாரிப்புகளை விற்பனைக்குக் காட்சிப்படுத்துவதற்கும், திறன் மேம்பாட்டு பயிற்சித்திட்டங்களை நடத்துவதற்கும் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். தனிநபர் மற்றும் சமூக விழாக்களை ஏற்பாடு செய்வதற்கும், இளைஞர்களுக்கான பயிற்சி நடவடிக்கைகளை ஏற்பாடு மேற்கொள்ளவும் மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

தொடர்ந்து, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வாழ்ந்து காட்டுவோம் திட்டம் மூலம் சுய உதவி குழுவிற்கு மாவு அரைக்கும் இயந்திரம் வழங்கியதை அதன் செயல்பட்டு குறித்து பார்வையிட்டார்.

மேலும், ஓங்கல்வாடி பகுதியில் ரூபாய் 15.15 இலட்சம் மதிப்பில் புதிதாக கட்டப்பட்டு வரும் நியாய விலை கடை கட்டிடத்தை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின் போது, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புறவளர்ச்சிக்கழக இயக்குனர் சபிதா பொாஜன், இணைபொது மேலாளர் திரு.அன்பு, ஊரக வளர்ச்சி முகமை உதவி திட்ட அலுவலர் விஜய், வட்டார வளர்ச்சி அலுவலர் மாரிமுத்து, உதவி பொறியாளர் சந்திரசேகர் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# பாஜக தேசிய தலைவர் நிதின் நபினுக்கு அக்னி ராஜேஷ் வாழ்த்து

பாஜக தேசிய தலைவராகப் பொறுப்பேற்றுள்ள நிதின் நபின் அவர்களுக்கு, தமிழக பாஜக அமைப்பு சாரா தொழில் பிரிவின் மாநில இணை அமைப்பாளர் அக்னி ராஜேஷ் தனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார். பீகார் மாநிலத்தைச் சேர்ந்த நிதின் நபின், மாணவர் பருவம் முதல் கட்சி அமைப்பில் இணைந்து பணியாற்றி, தனது தேர்தல் மேலாண்மை மற்றும் கட்சி கட்டமைக்கும் திறனால் 20.01.2026 அன்று தேசிய தலைவராகப் பொறுப்பேற்றுள்ளார்.

முன்னாள் மாநிலதலைவர் அண்ணாமலை, அக்னி ராஜேஷை நிதின் நபினிடம் அறிமுகப்படுத்திய தருணத்தை இந்த வேளையில் அக்னி ராஜேஷ் நினைவு கூர்ந்துள்ளார். 25 ஆண்டுகால அரசியல் பயணத்தில், தமிழ் மாநில காங்கிரஸ் மற்றும் இளைஞர் காங்கிரஸின் பல்வேறு பொறுப்புகள், பாஜக விளையாட்டு மற்றும் திறன் மேம்பாட்டு பிரிவு மாநில துணைத்தலைவர் பதவி, தற்போது வகித்து வரும் அமைப்பு சாரா தொழிற் பிரிவு மாநில இணை அமைப்பாளர் பொறுப்பு மற்றும் மத்திய, மாநில அரசு வாரியங்களில் ஆற்றிய பணிகள் ஆகியவற்றை அண்ணாமலை விவரித்தபோது, அப்போதைய செயல் தலைவராக இருந்த நிதின் நபின் தன்னை பாராட்டி ஊக்கமளித்ததாக அக்னி ராஜேஷ் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், புதிய தேசிய தலைவரின் வழிகாட்டுதலின்படி, பிரதமர் நரேந்திர மோடியின் நல்லாட்சியைத் தமிழகத்திலும் மலரச் செய்ய, 2026 சட்டமன்றத் தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி வெற்றி பெற முழு அர்ப்பணிப்புடன் பாடுபடப் போவதாக அக்னி ராஜேஷ் தனது வாழ்த்துச் செய்தியில் உறுதிபடக் கூறியுள்ளார்.




## ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி

# சத்தியமங்கலம் பகுதியில் ரூ.6.72 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டுப்பட்டுள்ள கட்டு ஊறுகாய் புல் தயாரிக்கும் அலகினை பார்வையிட்டார்



ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் பகுதியில் நேற்று (20.01.2026) மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி அவர்கள் சிறப்பு பகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.6.72 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கட்டு ஊறுகாய் புல் தயாரிக்கும் அலகினை நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 13.012026 அன்று கட்டு ஊறுகாய் புல் தயாரிக்கும் அலகானது திறந்து வைக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டது.

இந்த அலகானது மழைக் காலங்களில் உபரியாக கிடைக்கும் மக்காச் சோள தீவன பயிர்களை நொதித்தல் முறையில் ஊறுகாய் புல்லாக 75 முதல் 100 கிலோ சிப்பங்களில் அடைத்து பால் உற்பத்தியாளர்களின் கால்நடைகளுக்கு பசுந் தீவன பற்றாக்குறை காலங்களில் விநியோகம் செய்வதாகும். இம்முறையில் மக்காச் சோள பசுந்தீவனத்தில் உள்ள சத்துக்கள் முழுமையாக கால்நடைகளுக்கு வருடந் தோறும் வழங்க வாய்ப்புள்ளதால் கால்நடைகளின் ஆரோக்கியம் மேம்படுவதுடன் பாலின் அளவு மற்றும் தரம் மேம்படும். சத்தியமங்கலம் பகுதியில் மக்காச் சோளம் பயிரிடும் விவசாயிகளுக்கும் உரிய விலை வருடந்தோறும் கிடைப்பதற்கும் இத்திட்டம் வழிவகை செய்கிறது. இதன் மூலம் 3.75 லட்சம் பால் உற்பத்தியாளர்கள் பயன்பெறுவர்கள்.

மேலும், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கட்டு ஊறுகாய் புல் தயாரிக்கும் அலகில் அங்கு செயல்பட்டு வரும் பல்வேறு பிரிவுகளை பார்வையிட்டு, உற்பத்தி தரம் ஆகியவற்றை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு அவற்றின் மேம்பாட்டிற்கு ஆலோசனை வழங்கினார்.

இந்த ஆய்வின்போது, ஆவின் பொது மேலாளர் அமிர்தலிங்கம் உட்பட துறைசார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## ஓட்டுநர்களுக்கான இலவச கண் பரிசோதனை முகாம்:

# வாசன் கண் மருத்துவமனை சார்பில் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி




சாலை பாதுகாப்பு வார விழாவை முன்னிட்டு, ஈரோடு வாசன் கண் மருத்துவமனை சார்பில் ஓட்டுநர்களுக்கான சாலை பாதுகாப்பு மற்றும் கண் ஆரோக்கிய விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்வில் ஈரோடு தெற்கு போக்குவரத்து காவல் நிலைய ஆய்வாளர் ரமேஷ், ஈரோடு மேற்கு மோட்டார் வாகன ஆய்வாளர் நித்யா, ஈரோடு லாரி உரிமையாளர்கள் சங்கத் தலைவரும் ஈரோடு மாவட்ட அனைத்து தொழில் வணிக சங்கங்களின் கூட்டமைப்பு பொருளாளருமான துரைசாமி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்டு விழிப்புணர்வு நிகழ்ச்சியைத் தொடங்கி வைத்தனர்.

விழாவில் நூற்றுக்கும் மேற்பட்ட ஆட்டோ, டாக்ஸி மற்றும் கனரக வாகன ஓட்டுநர்கள் பங்கேற்று இலவச கண் பரிசோதனை செய்து கொண்டனர்.

இந்நிகழ்வில் வாசன் கண் மருத்துவமனை விழித்திரை அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர். சிந்தனை, கண்புரை மற்றும் கண் நீர் அழுத்த நோய் அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர்.மனோரமா S.பஹேதி, கண் பரிசோதனை நிபுணர்கள் டாக்டர்.சரண்யா மற்றும் டாக்டர் ப்ரீத்தி மதுபாலா ஆகியோர் கலந்துகொண்டு ஓட்டுநர்களுக்குத் தேவையான மருத்துவ ஆலோசனைகளை வழங்கினர். சாலை பாதுகாப்புவாரவிழாவை முன்னிட்டு ஜனவரி 11 முதல் பிப்ரவரி 11 வரை ஒரு மாத காலத்திற்கு வாசன் கண் மருத்துவமனையில் அனைத்து ஓட்டுநர்களுக்கும் இலவச கண் பரிசோதனை மேற்கொள்ளப்படும் என நிர்வாகம் தெரிவித்துள்ளது.

# சென்செக்ஸ் 1,065.71 புள்ளிகளுடனும், நிஃப்டி 353 புள்ளிகள் சரிவு!



மும்பை: உலகளாவிய வர்த்தக பதற்றங்கள், கலவையான காலாண்டு முடிவுகள், பலவீனமான உலகளாவிய அறிகுறிகள், இந்திய ரூபாயின் மதிப்பு தொடர் சரிவு, முதலீட்டாளர்களின் பரவலான விற்பனை மற்றும் தொடர்ந்து வெளியேறி வரும் வெளிநாட்டு நிதி உள்ளிட்டவையால் இன்றைய வர்த்தகத்தில் கடுமையான விற்பனை ஏற்பட்டு, முக்கிய குறியீடுகளான பிஎஸ்இ மற்றும் என்எஸ்இ-யில் தலா 1 சதவீதத்திற்கும் மேல் சரிந்து, வர்த்தக நேரத்தின் இடையே நிஃப்டி 25,200 புள்ளிக்கு கீழே சென்றது.

வர்த்தக முடிவில், சென்செக்ஸ் 1065.78 புள்ளிகள் சரிந்து 82,180.47 புள்ளிகளாகவும், நிஃப்டி 353 புள்ளிகள் சரிந்து 25,232.50 ஆக நிலைபெற்றது. பிஎஸ்இ மிட்கேப் மற்றும் ஸ்மால்கேப் குறியீடுகள் தலா 2% மேல் சரிந்து, முதலீட்டாளர்கள் மத்தியில் ஒருவிதமான பதற்றம் உருவாக்கியது.

நிஃப்டி-யில் எடர்னல், பஜாஜ் ஃபைனான்ஸ், கோல் இந்தியா, அதானி எண்டர்பிரைசஸ், ஜியோ ஃபைனான்சியல் உள்ளிட்ட பங்குகள் சரிந்தும் டாடா கன்ஸ்யூமர் ப்ராடக்ட்ஸ், டாக்டர் ரெட்டிஸ் லேப் மற்றும் ஹெச்டிஎஃப்சி வங்கி ஆகிய பங்குகள் உயர்ந்தன.

இன்றைய சந்தை சரிவில், பிஎஸ்இ-யில் பட்டியலிடப்பட்ட நிறுவனங்களின் சந்தை மூலதனம் சுமார் ரூ.10 லட்சம் கோடி சரிந்து ரூ.465.68 லட்சம் கோடியிலிருந்து ரூ.455.72 லட்சம் கோடியாக உள்ளது.

இன்றைய வர்த்தகத்தில், விற்பனை அழுத்தம் அதிகமாக இருந்ததால், அனைத்துத் துறைசார் குறியீடுகளும் சரிவுடன் முடிவடைந்தன. ரியல்டி குறியீடு 5% சரிந்தன. அதே சமயம் ஆட்டோ, ஐடி, மீடியா, மெட்டல், பொதுத்துறை வங்கிகள், பார்மா, ஆயில் & கேஸ், நுகர்வோர் பொருட்கள் உள்ளிட்ட துறைகள் 1.5 முதல் 2.5% சரிந்தன.

பங்கு சார்ந்த நடவடிக்கையில், 3வது காலாண்டு மதிப்பீடுகளைத் தவறவிட்டதால் பாரத் ஹெவி எலக்ட்ரிக்கல்ஸ் பங்குகள் 4% சரிந்தன. ஓலா எலக்ட்ரிக் மொபிலிட்டி தலைமை நிதி அதிகாரி ராஜினாமா செய்ததால் நிறுவனத்தின் பங்குகள் 8% சரிந்தன. ஹிந்துஸ்தான் ஜிங்க் பங்குகளின் வருவாய் மற்றும் வெள்ளி விலை உயர்வால் நிறுவனத்தின் பங்குகள் 3% உயர்ந்தன.

4.35 கோடி ஆதித்யா பிர்லா ஃபேஷன் பங்குகள் கைமாறியதைத் தொடர்ந்து நிறுவனத்தின் பங்குகள் 6% சரிந்தன. எல்டிஐ மைண்ட்ரீ பங்குகள் 3வது காலாண்டு லாபம் 11% சரிந்ததால் அதன் பங்குகள் 7% சரிந்தன. தீபக் நைட்ரைட் அதன் துணை நிறுவனமான தஹேஜில் ஹைட்ரஜன் ஆலையைத் தொடங்கியதால் அதன் பங்குகள் 4% உயர்ந்தன.

ஆதித்யா பிர்லா ஃபேஷன், ஆதித்யா பிர்லா ரியல் எஸ்டேட், கோத்ரெஜ் பிராபர்டீஸ், பிரஜ் இண்டஸ்ட்ரீஸ், லோதா டெவலப்பர், ஜீ என்டர்டெயின்மென்ட், ரிலாக்ஸோ ஃபுட்வேர், நெட்வொர்க் 18, தேஜாஸ் நெட்வொர்க்ஸ், என்சிசி, ஆக்சன் கன்ஸ்ட்ரக்ஷன், ஐனாக்ஸ் விண்ட், இந்தியன் ஹோட்டல்ஸ், ஜோதி லேப்ஸ், கான்கார்ட் பயோடெக் உள்ளிட்ட 700க்கும் மேற்பட்ட பங்குகள் இன்று 52 வார குறைந்த விலையை எட்டியது. சர்வதேச பிரெண்ட் கச்சா எண்ணெய் விலை, 0.09% உயர்ந்து, பேரல் ஒன்றுக்கு 63.91 அமெரிக்க டாலராக உள்ளது.

# குடியரசு நாள்: ஆளுநரின் தேநீர் விருந்தில் வி.சி.க. பங்கேற்காது! திருமாவளவன் அறிவிப்பு



குடியரசு நாளையொட்டி ஆளுநர் அளிக்கவுள்ள 'தேநீர் விருந்தில்' விசிக பங்கேற்காது என்று கட்சியின் தலைவர் தொல். திருமாவளவன் தெரிவித்துள்ளார்.

இதுபற்றி அவர் தனது எக்ஸ் பக்கத்தில்,

"சட்டமன்றத்தில் இன்று ஆளுநர் தனது கடமையை ஆற்றாமல் அவையிலிருந்து வெளியேறியிருப்பது அவரது வாடிக்கையான அணுகுமுறைதான். இதில் அதிர்ச்சியடைவதற்கு ஒன்றுமில்லை. அவர் இப்பொறுப்பிலிருக்கும்வரை இத்தகைய அடாவடிகளைத் தொடரவே செய்வார். அதற்கு ஏதேனும் சாக்குபோக்குகளையும் சொல்வார்.

ஆளுநர் உரையில் என்ன இடம்பெறவேண்டுமென்பதை ஆளும் பீடத்திலுள்ள மக்கள் பிரதிநிதிகள்தாம் முடிவு செய்வர் என்பது காலம் காலமாக நடைமுறையிலிருந்து வரும் மரபாகும். ஆனால், இவர் தாம் விரும்புவதுபோல 'ஆளுநர் உரை' அமையவேண்டுமென எதிர்பார்க்கிறார். இது அவரது திட்டமிட்ட 'அவை மரபு' மீறலாகும். தொடர்ந்து சட்டப்பேரவையை அவமதிக்கும் அவரது இப்போக்கை விசிக வன்மையாகக் கண்டிக்கிறது.

'தமிழ்த்தாய் வாழ்த்து' என்பது அவை நடவடிக்கைகளின் தொடக்கத்திலும் 'தேசிய கீதம்' என்பது அவை நிறைவிலும்தான் இசைக்கப்படும் என்பது அவருக்குத் தெரிந்த ஒன்றுதான். எனினும், தொடக்கத்திலேயே ஏன் இசைக்கவில்லை என்பது குதர்க்கவாதம். இது திமுக அரசுக்கு எதிரான -திட்டமிட்ட உள்நோக்கம் கொண்ட அவதூறு ஆகும்.

சநாதன சக்திகளிடம் வலுப்பெற்றுள்ள 'திராவிடக் கருத்தியலுக்கு' எதிரான 'ஒவ்வாமையின்' வெளிப்பாடுதான் ஆளுநரின் இத்தகைய செயல் என்பதை தமிழ் மக்கள் உணர வேண்டும். இந்நிலையில், குடியரசு நாளையொட்டி ஆளுநர் அளிக்கவுள்ள வழக்கமான 'தேநீர் விருந்தில்' விசிக இந்த ஆண்டும் பங்கேற்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்" என்று பதிவிட்டுள்ளார்.

Printed by,Hiwins Printers,Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at ERODE, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.